**செய்தி வெளியீடு எண்: 403** **நாள்: 06.06.2020**

## காவேரி டெல்டா பகுதிகளில் போர்கால அடிப்படையில் தூர்வாரும் பணிகள்!

## 7 மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் கண்காணிப்பு!

## 809 இயந்திரங்கள், 173 பொறியாளர்கள்களப்பணியில் தீவிரம்!

## டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சி! அரசுக்கு நன்றி!

தமிழகத்தை நீர்மிகை மாநிலமாக உருவாக்குவதை இலக்காக கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் விவசாயிகளின் நலனுக்காக நல்லாட்சி நடத்திவரும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு நீர் மேலாண்மையில் தனி கவனம் செலுத்தி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள் .

மாநிலம் முழுவதும் மக்களின் பங்கேற்புடன் குடிமராமத்து எனும் நீர்மேலாண்மை திட்டத்தை செயல்படுத்தி வரும் நமது முதலமைச்சர் அவர்கள், தென் மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழைக்கு முன்னதாக டெல்டா மாவட்டங்களில் உள்ள நீர் ஆதாரங்களை பாதுகாக்க நீர்நிலைகளை தூர்வாருதல் மற்றும் செப்பனிடுதல் போன்ற பணிகளுக்குமுன்னுரிமை வழங்கி சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

இதன் அடிப்படையில் தமிழகத்தின் உணவு களஞ்சியமாக திகழும் நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சாவூர், அரியலூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை ஆகிய டெல்டா மாவட்டங்களில் நீர் நிலைகளை தூர்வாருதல் மற்றும் செப்பனிடும் பணிகள் பெருமளவிலும், ஏனைய மாவட்டங்களில் குடிமராமத்து பணிகளும் அதிவேகமாக நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்களின் வழிகாட்டுதலுடன் ஏரி, குளம், குட்டை முதல் நீண்ட நெடிய கால்வாய், நீர் தேக்கங்கள் என நீர் ஆதார அமைப்பை முற்றிலும் சீரமைக்கவும், மழை நீர் துளியும் வீணாகாமல் சேமிக்கவும், தூர்வாருதல் மற்றும் செப்பனிடுதல் போன்ற பணிகள் கடந்த ஆண்டு சுமார் 2629.85 கிலோ மீட்டர் தூரத்திற்கு செய்து முடிக்கப்பட்டது.

சுமார் 60 கோடியே 95 லட்சம் ரூபாய்செலவில் 281 பணிகளை செப்பனிட 635 இயந்திரங்களைக் கொண்டு கடந்த ஆண்டு களப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு

கடைமடை வரை தண்ணீர் விரைந்து செல்லும் வகையில் பணிகள் முடிக்கப்பட்டன. இது டெல்டா விவசாயிகளிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. வேளாண்மை பயிர் சாகுபடி மற்றும் உணவு உற்பத்தி இலக்கை விட அதிகமாகவே எய்தப்பட்டது. இந்த வெற்றியை தொடர்ந்து இந்த ஆண்டும் டெல்டா மாவட்டங்களில் சிறப்பு தூர்வாரும் பணிகள் திட்டம் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ரூ. 6724.75 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்கள்.

கரூர் மாவட்டத்தில் 42.65 கி.மீ க்கு 11 தூர்வாரும் பணிகள் செய்திட ரூ.138 லட்சமும், திருச்சி மாவட்டத்தில் 54.53 கி.மீ. க்கு 20 தூர்வாரும் பணிகள் செய்திட ரூ.176.80 லட்சமும், அரியலூர் மாவட்டத்தில் 4.00 கி.மீ. க்கு 1 தூர்வாரும் பணி செய்திட ரூ. 16 லட்சமும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 944.97 கி.மீ. க்கு 165 தூர்வாரும் பணிகள் செய்திட ரூ. 2291.90 லட்சமும்,திருவாரூர் மாவட்டத்தில் 1244.06 கி.மீ. க்கு 106 தூர்வாரும் பணிகள் செய்திட ரூ.2256.55 லட்சமும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 1072.71 கி.மீ. க்கு 80 தூர்வாரும் பணிகள் செய்திட ரூ.1671.50 லட்சமும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 94.23 கி.மீ. க்கு 9 தூர்வாரும் பணிகள் செய்திட ரூ.174.00 லட்சமும், மொத்தம் 3457.15 கி.மீ. தூர்வார 392 பணிகளுக்கு ரூ. 6724.75 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் அதிவேகமாக நடைபெற்று வருகின்றன.

கடலூர் மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்திற்கு ரூ.200 லட்சம் ஒதுக்கீடு செய்து 21 பணிகள் மூலம் 199.85 கிமீ. தூர்வாரிட உத்தரவிட்டுள்ளார்கள். இப்பணி ஓரிரு நாளில் துவக்கப்பட்டு 10 நாட்களில் முடித்திட துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





**திருவாரூர் மாவட்டம் நன்னிலம் முடிகொண்டான் ஆறு மற்றும் தேதியூர் திருமலை ராஜன் ஆறு தூர்வாரும் பணிகள்**

சிறப்பு தூர்வாரும் பணிகளை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும், பணிகளை துரிதப்படுத்தி முடிக்கவும் 7 மாவட்டத்திற்கும் தனித்தனியாக மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, கண்காணித்து பணியை துரிதப்படுத்தி வருகின்றனர். மேலும், 7 மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள், நீர்வள ஆதாரத்துறையின் தலைமைப்பொறியாளர், கண்காணிப்புப் பொறியாளர், செயற்பொறியாளர், உதவி செயற் பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள் என 173 பொறியாளர்களும், 809 இயந்திரங்களும் களப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**<u>கும்பகோணம் வட்டம், ரெட்டிபாளையம், முடிகொண்டான் ஆறு</u>**





**பணிக்கு முன்பு**

**பணிக்கு பின்பு**





### கும்பகோணம் வட்டம், செம்பியவரம்பால் கால்வாய்

திட்டமிடப்பட்டுள்ள காலத்திற்குள் இப்பணிகளை முடிக்க தினசரி இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு பணிகள் இலக்கு தவறாமல் செயல்படுத்தப்படுகிறது. நவீன செயலிகள் மூலம் தலைமைச் செயலகம் முதல் பணி நடைபெறும் இடம் வரை தங்குதடையின்றி தொடர்பும் கண்காணிப்பும் ஏற்படுத்தப்பட்டதால் இப்பணிகள் வெளிப்படையாக நடைபெறுகின்றன. பல நிலைகளில் கண்காணிப்புகள் மற்றும் கள ஆய்வுகள் மூலமாக அனைத்து பணிகளும்தரமாக செய்யப்படுகிறது. வரும் ஜுன் 12ம் தேதி மேட்டூர் அணையில் நீர் திறப்பதற்கு முன் பணிகளை முடிக்க வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளர்கள்ஆகவே, தூர்வாரும் பணிகள் அனைத்தும் போர்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது.

நவீன தொழில்நுட்ப வசதிகள், துல்லியமான திட்டமிடல், மக்களின் நேரடி பங்கேற்பு என வெளிப்படையாக நிகழும் இந்த பணி 100% வெற்றி மட்டுமல்ல சிறப்பான நீர் மேலாண்மையில் தமிழ்நாடு இந்தியாவிற்கே முன்னுதாரணமாக திகழ்கிறது. மிகப்பெரிய நீர் ஆதார கட்டமைப்பை குறுகிய காலத்தில் சீரமைப்பது ஒரு சாதனையே.

**<u>கடைமடை விவசாயிகளின் கருத்து:</u>**

**<u>எம்.கணேசன், வைரவன் கோவில் வாய்க்கால் பாசனதாரர், தஞ்சை மாவட்டம்.</u>**



‘‘வைரவன் கோவில் வாய்க்கால் கடந்த 8 ஆண்டுகளாக தூர்வாரப்படாததால் தண்ணீர் வராமல் எங்களால் விவசாயம் செய்ய முடியவில்லை. பிழைக்க வழி இன்றி

கஷ்டப்பட்டோம். இந்த வாய்க்கால் மூலம் 500 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. இப்பொழுது மாண்புமிகு முதல்வர் எடப்பாடி அய்யா தூர்வாரும் திட்டத்தை கொண்டுவந்ததால் பணி சிறப்பாக முடிந்துள்ளது. மேட்டூர் அணை திறந்ததும் கடைமடை பகுதியான எங்களுக்கு தண்ணீர் வேகமாக வந்து சேரும். குறுவை சாகுபடி செய்ய நாங்கள் தயாராக உள்ளோம். முதலமைச்சருக்கு எங்களின் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.'' என்றார்.

**<u>திரு.எம். பன்னீர் செல்வம் – கல்யாண ஒடை பாசனதாரர் சங்கத் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம் :</u>**



'' பல ஆண்டுகளாக காவிரி தண்ணீரை இப்பகுதி விவசாயிகள் பார்க்கவோ, பயன்படுத்தவோ முடியாத சூழ்நிலை இருந்தது. இப்பொழுது 670 ஏக்கர் பாசன வசதி பெறும் வகையில் கல்யாண ஓடை தூர்வாரப்பட்டுள்ளது. எனவே நாங்கள் குறுவை சாகுபடிக்கு தயாராக உள்ளோம். எங்களை வாழ வைத்த முதலமைச்சர் எடப்பாடி அய்யா அவர்களுக்கு நன்றி'' என்று கூறினார்.

**<u>திரு. அழகர், பழைய பள்ளி ஏரி கால்வாய் (வடக்கல்) பாசனதாரர்:</u>**

''கடந்த ஆண்டு விக்கிரம ஆறு தூர்வாரும் திட்டத்தின் கீழ் சிறப்பாக தூர்வாரப்பட்டு கடைமரை வரை பாசன நிலங்களுக்கு தண்ணீர் வந்து சேர்ந்தது இதனால் அனைத்து விவசாயிகளும் மிகுந்த பயனடைந்தனர்.



அதுபோல, இந்த ஆண்டும் பழைய பள்ளி ஏரி கால்வாயும் தூர்வாரப்படுகிறது.இப்பகுதி விவசாயிகள் சுமார் 850 ஏக்கர் பாசன வசதி பெறும் இப்பகுதி விவசாயிகள் பெறும் மகிழ்ச்சியில் உள்ளனர். இந்த திட்டத்தின் மூலம் இனி நாங்கள் அதிக பயன்பெறுவோம்.கடைமடை விவசாயிகளான எங்களுக்கும் வாழ வழிகாட்டிய விவசாயிகளின் முதல்வர் அய்யா அவர்களுக்கு எங்களின் நெஞ்சார்ந்த நன்றியை காணிக்கையாக்குகிறோம்.'' என்றார்.

கடந்த ஆண்டு டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி மட்டும் 2.90 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டது. இந்த ஆண்டு 3.50 லட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்படவுள்ளது. இதன் மூலம் கடந்த ஆண்டை விட டெல்டா மாவட்டங்களில் இவ்வாண்டு அரிசி உற்பத்தி 1 லட்சம் மெட்ரிக் டன் கூடுதலாக உற்பத்தி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.கடந்த காலங்களில் கடைமடை வரை தண்ணீர் செல்ல 25 நாட்கள் ஆகும். ஆனால், தற்போது சிறப்பு தூர்வாரும் பணிகள் திட்டத்தினால் 10 நாட்களில் தண்ணீர் கடைமடை வரை விரைந்து செல்லும். ஆகவே, டெல்டா விவசாயிகள் குறுவை நெல் சாகுபடி பணிகளை செய்வதற்கு தயார் நிலையில்மகிழ்ச்சியுடன் உள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**